தகவலறியும் உரிமைக்கான கட்டண அமைப்புப் பற்றிய அறிவித்தல்

தகவலறியும் உரிமை ஆணைக்குழுவானது 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 42ஆல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, 2017 பெப்ரவரி 3, முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கட்டணங்கள் குறித்து பின்வரும் விதிகளை வகுத்துள்ளது.

1. **<u>விண்ணப்பத்திற்கான கட்டணம்</u>**

   1.1 தகவற் கோரிக்கையை முன்வைக்கும் பிரஜைகளுக்கு தகவல் அறியும் உரிமைக்கான விண்ணப்பப் படிவத்தை வழங்குவதற்கு எந்தவிதமான கட்டணமும் அறவிடப்படலாகாது.

   1.2 தகவலறியும் உரிமைக்கான கோரிக்கையைச் செயற்படுத்த எந்தவிதக் கட்டணமும் அறவிடப்படலாகாது.

2. **<u>தகவலுக்கான கட்டணம் (கீழே உள்ள 3 ஆம் பிரிவுக்கு உட்பட்டது)</u>**

   2.1 நகலெடுப்பதற்கான கட்டணம்

   2.1.1 A4 அளவு (21 செ.மீ x 29.7 செ.மீ) மற்றும் அதைவிட சிறிய அளவிலான தாளில் வழங்கப்படும் தகவலுக்கு ரூ. 2/- (ஒரு பக்கம்) மற்றும் 4/- (இரண்டு பக்கம்).

   2.1.2 Legal அளவு (21.59 செ.மீ x 35.56 செ.மீ) மற்றும் A3 அளவிலான (29.7 செ.மீ x 42 செ.மீ) தாளில் வழங்கப்படும் தகவலுக்கு 4/- (ஒரு பக்கம்) மற்றும் 8/- (இரண்டு பக்கம்).

   2.1.3 மேலே குறிப்பிடப்பட்டதை விட பெரிய தாளில் வழங்கப்படும் தகவல்களுக்கு அதற்குரிய செலவு அறவிடப்படும்.

   2.2 அச்சுப்பிரதிக்கான கட்டணம்

   2.2.1 A4 அளவு (21 செ.மீ x 29.7 செ.மீ) மற்றும் அதைவிடச் சிறிய அளவு (29.7 செ.மீ) தாளில் வழங்கப்படும் தகவலுக்கு 4/- (ஒரு பக்கம்) மற்றும் 8/- (இரண்டு பக்கம்).

   2.2.2 Legal அளவு (21.59 செ.மீ x 35.56 செ.மீ) மற்றும் A3 அளவு (29.7 செ.மீ x 42 செ.மீ) தாளில் வழங்கப்படும் தகவலுக்கு 4/- (ஒரு பக்கம்) மற்றும் 8/- (இரண்டு பக்கம்).

   2.2.3 மேலே குறிப்பிடப்பட்டதை விட பெரிய தாளில் வழங்கப்படும் தகவல்களுக்கு அதற்குரிய செலவு அறவிடப்படும்.

   2.3 கோரிக்கை விடுக்கும் பிரஜைகளால் வழங்கப்படும் குறுந்தகடு (Diskette), இறுவட்டு (Compact Disc), USB அல்லது இவை போன்ற மின்னணு சாதனத்தில் தகவலை நகலெடுப்பதற்கு ரூ. 20/-.

2.4 பொது நிறுவனமான இலங்கை வங்கியால் வழங்கப்படும் குறுந்தகடு (Diskette), இறுவட்டு (Compact Disc), USB அல்லது அவை போன்ற மின்னணு சாதனங்களில் தகவலை நகலெடுப்பதற்கு அதற்குரிய செலவு அறவிடப்படும்.

2.5 எந்தவொரு ஆவணத்தையும் கட்டுமானத் தளத்தையும் ஆய்வு செய்வதற்கு அல்லது பார்வையிடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு 50 ரூபாய் அறவிடப்படும். அவ்வாறு ஆய்வு செய்வதற்கு அல்லது பார்வையிடுவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு மேல் ஆகுமிடத்து முதல் ஒரு மணி நேரத்துக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

2.6 மாதிரிகளுக்கு அவற்றுக்குரிய செலவு அறவிடப்படும்.

2.7 மின்னஞ்சல் மூலம் வழங்கப்படும் தகவல்கள் இலவசம்.

3. **<u>இலவசமாக வழங்கப்படும் தகவல்</u>**

3.1 நான்கு பக்கங்களில் (A4 அளவு) நகல் அல்லது அச்சிடப்பட்ட வடிவத்தில் தயாரிக்கப்பட்ட அல்லது உள்ளடக்கப்பட்ட தகவல்கள் இலவசமாக வழங்கப்படும்.

3.2 வழக்கமாக இலவசமாகக் கிடைக்கும் தகவல்கள் தொடர்ந்து இலவசமாக வழங்கப்படும்.

4. **<u>எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கட்டணம் செலுத்தும் முறை</u>**

4.1 “தரகுக் கணக்கு – தகவல் அறியும்உரிமை” (Comm. A/C Right to information) எனும் கணக்கிற்கு பணம் செலுத்தப்பவேண்டும் அல்லது,

4.2 “தரகுக் கணக்கு – தகவல் அறியும்உரிமை” (Comm. A/C Right to information) சார்பில் வரையப்பட்ட வங்கி வரைவு அல்லது உத்தியோகப்பூர்வ காசோலை வைப்பிலிடப்பட வேண்டும் அல்லது,

4.3 “தரகுக் கணக்கு – தகவல் அறியும்உரிமை” (Comm. A/C Right to Information) கணக்கிற்கு சென்மதியாக மேற்கொள்ளப்பட்ட அஞ்சற் கட்டளை வைப்பிலிடப்பட வேண்டும்.

எந்த முறையில் பணம் செலுத்தப்பட்டாலும் கட்டணத்தை அறவிடும் கிளையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் முறையாக கையொப்பமிடப்பட்ட ஏற்றுக்கொள்ளல் ஆவணம் தகவற் கோரிக்கையாளருக்கு வழங்கப்படவேண்டும்.

Classification: Public